REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 20உ ஞாயிறு (4—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 21உ செவ்வாய் (5—7—55) [இதழ் 17

திருமணத்தைத் தடுத்த 'கிராமபோன்' பெட்டி

திருமணம் ஏற்பாடாகிவிட்டது. மணமகன் வீட்டாரும், மணமகள் வீட்டிற்கு வந்தாய்விட்டது. ஆனாலும், ஒரு 'கிராமபோன்' இல்லாது போனது, திருமணம் நடைபெறாது செய்துவிட்டது. மணமகன் வீட்டார் ஒலி பெருக்கியுடன் கூடிய கிராமபோன் கொண்டுவராதது, தங்களுக்கு பெருத்த அவமானமாயிருப்பதாகக் கூறி, மணமகள் வீட்டார் மணமகன் வீட்டாரைத் திருப்பி அனுப்பிவிட்டனராம்!

ஆச்சாரியார் போக்கில் சச்சார்!

அகாலி தளத்துடன் மோத காங்கிரசைத் தூண்டுகிறார்!

வகுப்புவாதத்தை வளர்ப்பதாகக் குற்றச்சாட்டு

அமிர்தசரஸ், ஜுலை 1—

"வகுப்புவாதக் கிருமிகளைப் பரப்புவதாக உள்ளது, அகாலிதளத்தவர் நடத்தும் கிளர்ச்சி,"

என்று பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார் குறிப்பிட்டிருக்கிறார்.

அகாலிதளத்தவரின் கிளர்ச்சியை எதிர்த்து முறியடிக்க, காங்கிரஸ்காரர்கள் முன்வர வேண்டும் என்றும், இதற்கு காங்கிரஸ்காரர்கள் தங்களிடமுள்ள, அடிபிடிச் சண்டைகளை மறந்துவிட்டு, எல்லோரும் ஒன்றுபட்டு நின்றால்தான் முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவர் மேலும், பிரதிநிதிகள் தேர்தலின்போதோ, நகரசபைத் தேர்தலின்போதோ, காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே வகுப்புவாத நோய் ஏற்படுவதைக் கண்டு தாம் வருந்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

"மாநிலங்களை திருத்தியமைப்பது பற்றி தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. யாரும் அதைத்தடுக்கவில்லை. ஆனால் மாநிலத்தினுடைய அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் எந்த ஒரு ஊர்வலம் ஆர்ப்பாட்டம் போன்ற எதையும் சர்க்கார் அனுமதிக்கமுடியாது," என்றும் கூறினாராம்.

"அரசியல் சட்டத்தில், மக்களுக்கு தங்கள் கோரிக்கைகளைத் தெரிவிக்க, கூட்டம் கூட்டுதல், ஆர்ப்பாட்டம் நடத்துதல் போன்றவைகளுக்காக உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகளில் குறுக்கிட சர்க்கார் விரும்பவில்லை."

"ஆனால், அதே அரசியல் சட்டம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட 'சில நியாயமான தடைகளை' விதிக்கவும் அரசாங்கங்களுக்கு அனுமதி தந்திருக்கின்றது" என்றும் பேசியிருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்

'தமிழ் நாட்டில் சில தொழிற்சாலைகளையேனும் நிறுவுக'

தமிழ் நாடு காங்கிரசும் கதறுகிறது

தென்காசி, ஜுலை 3—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய அடிப்படைத் தொழிற்சாலைகள் சிலவற்றை, தமிழ் நாட்டில் நிறுவவேண்டுமென மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு, தமிழ் நாடு காங்கிரஸ் செயற்குழு, இங்கு கூடியபோது தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருப்பதாகத் தெரிகிறது.

தீர்மானத்தை மந்திரி பக்தவத்சலம் முன்மொழிய மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பலரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கின்றனர்.

திரு-தமிழக விடுதலைப் போராட்டம்

பலியானவர் குடும்பத்திற்கு பண உதவி

மேலும் 3 பேருக்குக் கிடைக்கிறது

திருவனந்தபுரம், ஜுலை 3—

தென் திருவாங்கூரில் கடந்த ஆண்டு ஆகஸ்டு 11-ந் தேதி நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் இழந்தவர்களில் மேலும் மூன்று பேர்களின் மனைவிகளுக்கோ அல்லது அடுத்தபடியான உறவினர்களுக்கோ, தலா ரூ. 500 வழங்க தி. கொ. சர்க்கார் அனுமதியளித்திருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே, நான்கு பேர்களின் உறவினர்களுக்கு இத்தகு நஷ்டஈடு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

விசாகப் பட்டணத்தில் உள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் துறையில் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்ட 7,000 டன் நிறையுள்ள சரக்குக் கப்பல் 'ஜலவிகாரை' சேர்த்து, அங்கு இதுவரை மொத்தம் 13 கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

சீன வானொலியில் தாய்நாட்டை எதிர்த்துப் பேசினர்!

நேபால் திரும்ப சிங் துடிக்கிறார்!

அவருக்கு மன்னிப்புக் கிடைக்குமாம்

நேபால் மன்னரால் நாடு கடத்தப்பட்ட கே. ஐ. சிங் என்பார், சீனாவில் தஞ்சம் புகுந்தார்.

சீன பீகிங் வானொலியின் மூலம் நேபால் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசிவந்தார்.

அவருடைய சொல், நேபால் அரசியல் வாழ்வில் பெரியதோர் கொந்தளிப்பை முன்னர் உருவாக்கியது.

அவர் போக்கிற்கு, இந்தியாவிலும் எதிர்ப்பு இருந்தது.

அவர் மீண்டும் நேபால் திரும்ப முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்.

சிங்கின் முன்னாள் செயலை மன்னித்து, மீண்டும் நேபாலுக்குள் நுழையும் அவர் நாட்டத்திற்கு, மன்னர் அனுமதி வழங்கக்கூடுமென நம்பப்படுகிறது.

நேபால் தலைநகரான காட்மண்டுவில், அவருக்கு ஆடம்பரமான வரவேற்பு காத்துக் கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

கே. ஐ சிங் இப்பொழுது திபேத் எல்லையோரத்தில் தங்கி இருக்கிறார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அவர் நேபாலை விட்டு வெளியேறிய 'ராசுவா' கணவாய்மூலமாகவே, மீண்டும் திரும்பி வருவார். காட்மண்டு வந்தடைய அவருக்கு இரண்டு நாள் பிடிக்கும்.

தனது சென்றகால செயல்கள் அனைத்தையும் மன்னர் மன்னித்துவிடுவார் என சிங் பலமாக நம்பிக்கொண்டிருக்கிறார். தனது உட்கருத்தை மன்னர் வெளிப்படையாகக் கூறவில்லையானாலும், சிங்கிற்கு சாதகமாக செல்வாக்குடைய அரசியல் கட்சிகள் அனைத்தும் கொடுத்துள்ள கூட்டுக்கோரிக்கை அவருடைய முடிவிற்குக் காத்துக் கிடக்கிறது.

நேபாள ஆளும் வர்க்கமான ராணா வகுப்பைச் சேர்ந்தவர் டாக்டர் சிங். அவர், இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பின், ராணாக்களை எதிர்த்து கிளர்ச்சி செய்தார். ஜனநாயக இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்.

பின் 1951ல் ராணாக்கள் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி நிறுவப்பட்டபோது டாக்டர் சிங், தீவிர அரசியல் வாதிகளுடன் சேர்ந்துகொண்டு, அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். அப்போது அவர் கைது செய்யப்பட்டு, காட்மண்டுவிற்குக் கொண்டுவரப்பட்டார்.

அவர், சிறையிலிருந்து அப்போது தப்பியோட அவரது பாதுகாவலர்களே உதவி செய்தனர். சீனாவுக்குள் தஞ்சம் புகுந்த அவரைப் பிடித்துத் தருவோருக்கு பரிசு தருவதாக நேபாள சர்க்கார் அறிவித்தது. நேபாளத்திற்கு எதிராக டாக்டர் சிங், பீகிங் வானொலியிலிருந்து பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பின்னர், இந்தியாவின் தலையீட்டின் பேரில், பீகிங் வானொலியிலிருந்துபேசுவது நிறுத்தப்பட்டது.

இப்போது, சிங் நேபாள அரசாங்கத்திற்கு, 'நல்ல பிள்ளை'யாக நடந்துகொள்வதாக உறுதிமொழி அளிப்பாராம்.

சீனா புதிதாக ஏற்றுக்கொண்டிருக்கிற 'தலையிடாக் கொள்கை'யை சோதித்துப் பார்க்க, டாக்டர் சிங்கின் எதிர்காலம் கடத்த உதவும் என்றும், சீனாவில் பீகிங்கில் டாக்டர் சிங் நெடுநாட்கள் தங்கியிருந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

பத்தாயிரம் பாங்கி ஊழியர் பொது வேலை நிறுத்தம்?

40 ஊழியர் நீக்கப்பட்டதின் எதிரொலி

வெளிநாட்டு பாங்கி ஒன்றின் கல்கத்தா கிளையிலிருந்து கடந்த 1948-ல் 40 ஊழியர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டனர். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளாவிட்டால், ஜுலை 14ந் தேதியிலிருந்து மேற்கு வங்காளத்திலுள்ள 10,000 பாங்கி ஊழியர்களும் பொது வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதாக, 1948ல், அந்த 40 ஊழியர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டனராம்

வேலையிலிருந்து நீக்க நியாயமில்லை என்று 'டிரிபியூனல்' கூறியிருப்பதாகவும், அந்த தீர்ப்பை உயர் நீதிமன்றம் உறுதி செய்திருப்பதாகவும், மாநில பாங்கு ஊழியர் சங்கத் தலைவர் பிரபாத்கார் கூறுகிறார்.

ஷேக் அப்துல்லாவின் 'கடிலாக்' கார்?

'லாட்ரியில்' விற்கப்படுகிறது

காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவின் 'கடிலாக்' கார் (சுமார் 80,000 ரூபாய் பெறுமானது) 'லாட்டரி' மூலம் விற்கப்பட்டு, அதன் கிடைக்கும் தொகையை, காஷ்மீர் செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தருவது என்று, காஷ்மீர் அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது

தனக்கும், காஷ்மீருக்கு வருகை தரும் முக்கியமானவர்களுக்குமாக மட்டும் உபயோகிப்பதற்கென ஷேக் அப்துல்லா அந்த காரை வாங்கியிருந்தார்.

ஷேக் அப்துல்லா மட்டுமன்றி மௌலானா அபுல்கலாம் ஆசாத், காஷ்மீருக்கு கடந்த 1953 ஜுலையில் சென்றிருந்தபோது, அதில் பிரயாணம் செய்திருக்கிறார். அவர் ஒருவர்தான் அந்தக் காரில் பிரயாணம் செய்த வெளியார் என்று தெரிகிறது.

சர்க்கார் அலுவலகத்தின் முன் மறியல்

பொதுவுடைமையினர் நடவடிக்கை

திருவனந்தபுரம், ஜுலை 3—

புனலூரிலுள்ள காகித ஆலை தொழிலாளர்களுள் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவில் இயங்கும் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்கள் திரு.—கொ. சர்க்கார் அலுவலகத்தின் முன்னர் செங்கொடியும், அட்டைகளும் தாங்கிக்கொண்டு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர் என்று பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்தச் சத்தியாக்கிரகம், மேற்படி புனலூர் காகிதத் தொழிற்சாலை மூடப்பட்டதை எதிர்த்தே மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிகிறது.

பட்டத்தின் வீழ்ச்சிக்குப்பின் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்த கடந்த 4, 5 திங்களுக்குள், சர்க்கார் அலுவலகத்தின்முன்னர் இப்போதுதான் முதன்முறையாகச் சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது.

ஆனால்: நேற்று மீண்டும் திறக்கப்பட்ட அந்த ஆலையில், இப்போது, காங்கிரஸ் கட்சி ஆதரவு பெற்ற தொழிற் சங்கம் ஒன்றைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டும்தான் வேலைக்குச் சென்று வருகின்றனர் என்றும் அப்பத்திரிகை மேலும் அறிவிக்கிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—7—'55 திங்கள்

அத்தாட்சி எங்கே?

இலங்கையில் வாழும் திராவிடர்-அல்ல-வடவரின் ஏகாதிபத்திய நோக்குப்படி 'இந்தியர்'களின் குடிஉரிமை நிர்ணயம் பற்றிய பிரச்சினைக்குப் பரிகாரம், கடந்த ஆண்டு பண்டித நேரு அவர்கள், செஞ்சீனப் பயணத்திற்காக தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்த அவசரத்தில் இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்தான் என்று கூறினர்.

'டில்லியில் இரு பிரதமர்களும் மேற்கொண்ட ஒப்பந்தம், பிரச்சினைக்கு நிரந்தரமானதோர் பரிகாரத்தைத் தரத்தக்கதாக அமையும் என்று கூறுவதற்கில்லை,' என்பதை அப்போதே தி. மு. கழகம் மக்களுக்குத் தெரிவிக்கத்தான் செய்தது.

காங்கிரசார் உள்ளிட்ட எல்லா 'ஏக இந்திய' மோகிகளும், ஒப்பந்தத்தில் நமக்கிருந்த நம்பிக்கைக் குறைவின் அடிப்படையை மறைத்துவிட வேண்டும் என்பதற்காக, 'இவர்களே இப்படித்தான் எல்லாப் பிரச்சினைகளையும் 'வடக்கு-தெற்கு' என்ற குறுகியகண்கொண்டே பார்க்கிறார்கள்,' என்று குறைப்பட்டனர் — தூற்றித் திரிந்தனர்.

காங்கிரஸ் ஏடுகளோ, ஒப்பந்தத்தை, 'இலங்கை வாழ் திராவிடர் அனுபவித்துவரும் பலவகையான கொடுமைகளுக்கும் 'சர்வரோக சஞ்சீவி' என வர்ணித்துக்காட்டி, பெருமிதத்தில் மிதந்துகொண்டிருந்தன

ஆனால், அந்தோ! பரிதாபம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட 'மை' உலருமுன்பே ஒப்பந்தத்தின் 'விளைவு'கள் தெள்ளெனத் தெரியலாயிற்று

நாளாவட்டத்தில், இலங்கை சர்க்கார் இந்தியாவையும், இந்திய சர்க்கார் இலங்கையையும் 'ஒப்பந்தத்தை அமுல் செய்ய ஒத்துழைக்கவில்லை,' என்ற குற்றச்சாட்டை மாறிமாறிச் சுமத்திக்கொண்டிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி, இரு சர்க்கார்களின் பிரதிநிதிகளும் கூடி அவ்வப்போது விவாதித்து, சந்தேகங்களைப் போக்கிக்கொண்டோம்-தவறுகளை சரி செய்துகொண்டோம்; இனி எல்லாம் சரிவர நடைபெறும்; ஒப்பந்தம் அமுலாகும்; பலன் உருவாகும்,' என்றெல்லாம் தகவல் தந்து கொண்டே இருந்தனர்.

ஆனால், இந்த இடைக் காலத்தில், ஆயிரக்கணக்கான திராவிடர்கள், இலங்கையிலிருந்து கப்பல் ஏற்றப்பட்டுக் கொண்டேதானிருந்தனர்.

கடந்த மே திங்களுடன் முடிந்த எட்டுமாத காலத்தில் 11,838 பேர் இலங்கையிலிருந்து வெளியேறியிருக்கின்றனர். ஒரு லட்சத்திற்கும் அதிகமான பேர்கள் 'நாடற்றவர்கள்' என்று பெயர் சூட்டப்பட்டு, நாள்தோறும், நூற்றுக்கணக்கில் வெளியேற்றப்பட்டனர்—என்ற சோகச் செய்திகள்தான், ஒப்பந்தத்தின் விளைவுகளாயிருந்து வந்திருக்கின்றன.

'ஒப்பந்தமே எல்லாம் செய்யும்' என்று கூறிய டில்லி அரசியல்வாதிகள் இன்று, 'ஒப்பந்தம் உயிரற்றுவிட்டது; இனி பிரச்சினைக்குப் பரிகாரம் தருவதற்கு ஒப்பந்தம் பயன்படாது,' என்று தெரிவிக்கின்றனர்.

கொத்தலாவலை சர்க்காரோ, 'ஒப்பந்தத்தின் இரு விதிகள் பற்றி எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது; இந்திய சர்க்காரை விளக்கம் கேட்கப்போகிறோம்,' என்று கூறுகின்றனர்.

'ஒப்பந்தம் செய்துகொண்ட இரு சர்க்கார்களும், இன்று ஒப்பந்தம் பற்றித் தரும் வியாக்கியானங்களைப் பார்த்தால், இவர்கள், இலங்கை வாழ் திராவிடர்களின் வாழ்வை வேடிக்கையான ஒரு பொருளாகக் கொண்டு விளையாடுகின்றனரோ, என்னவோ தெரியவில்லை? இவர்களின் 'விளையாட்டு,' எங்களுக்கு வேதனையாகவன்றோ இருக்கிறது,' என்று இலங்கை திராவிடர் மனம் புழுங்கிச் சாகின்றனர்.

'ஒருவர் கள்ளத்தனமாகக் குடியேறியவர் என்று எந்தக் காரணங்களாலேனும் கருதப்பட்டுவிட்டால், அவரை, இந்தியக் குடிமகனாக ஏற்றுக் கொள்ளவேண்டும்,' என்று இலங்கை கேட்கிறது; 'நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்கின்றனர் — இந்திய சர்க்கார். என்ன வேதனை தரும் விசித்திரம் பாருங்கள்!

ஒப்பந்தம் செய்துகொள்வதென்றால், ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருசாராருக்கும் ஒப்பந்தம எதற்காகச் செய்யப்படுகிறதோ அந்தப் பிரச்சினை பற்றிய முழு விபரங்களில் தெளிவும், அந்தப் பிரச்சினைக்காக கள்ளமில்லா உள்ளத்துடன் விவாதித்தபின் கூறப்படும் முடிவுகளின் தராதரத்தில் திடமான நம்பிக்கையும், அந்த முடிவுகளை அமுல் செய்வதில் நல்லெண்ணமும் நிச்சயம் இருந்தாக வேண்டும்; அப்போதுதான், ஒப்பந்தம் சிறந்ததாக—எதிர்பார்க்கும் பலன் தரத்தக்கதாக இருக்க முடியும்.

மேற்கண்டவை எதுவும், இலங்கை—இந்தியப் பிரதமர்களில் எவருக்கும் ஒப்பந்தத்தை மேற்கொண்டபோது இருந்ததாகத் தெரியவில்லை.

எப்படியேனும், எவ்வளவுக் கதிகமான திராவிடரை இலங்கையிலிருந்து துரத்த முடியுமோ அவ்வளவுக்கு அதிகமான பேர்களைத் துரத்திவிட முடிவு செய்துவிட்ட கொத்தலாவலைக்கு, பிரச்சினைக்கு நியாயமான முடிவு காண்பதில் நல்லெண்ணம் இருக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது தான்; ஆனால், 'வடக்காவது—தெற்காவது? எல்லாம் ஒன்று தான்; எல்லோரும் எனக்கு சமமானவர்கள்தான்; எல்லோரும் பாரத புத்திரர்கள் தான்,' என்று பேசித் திரியும் 'ஏக இந்திய' வாதிகளின் புகழ் வாய்ந்த தலைவர் பண்டிதருக்கு 'இலங்கை இந்தியர்'களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் நல்லெண்ணம் இருந்திருக்கவேண்டாமா? இருந்தது என்பதற்கு அத்தாட்சி எங்கே?

அமெரிக்க டாலர் உதவி

நெய்வேலி நிலக்கரி தொழிலுக்கும் கிடைக்குமாம்!

இந்தியாவில் ஐந்து கூட்டுத் திட்டங்களுக்காக, அதிகமான அமெரிக்கப் பொருளாதார உதவி செய்யும் ஒப்பந்தம் ஒன்று டில்லியில் கையெழுத்தாகியிருக்கிறது

அமெரிக்காவில் கல்வி வசதியை அதிகரித்துத் தர—தொழில் நுணுக்கப் பயிற்சி தர—முதலியனவற்றிற்காக அமெரிக்கா 6,07,900-டாலர்களை ஒரு திட்டத்தின்படி தருமாம்.

மேலும் தொழில் ஆராய்ச்சி, தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையங்கள் இவற்றிற்காக, 5,13,500-டாலர் அமெரிக்கா தருமாம் இதன்படி, பலவகையான, எரி பொருள் ஆராய்ச்சி, தோல் ஆராய்ச்சி, கண்ணாடி ஆராய்ச்சி, உணவுத் துறை ஆராய்ச்சி, மருந்து உற்பத்தி ஆராய்ச்சி முதலியனவற்றிற்காக இந்த தொகை பயன் படுத்தப்படும்.

தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் மேலும் சோதனை வேலைகள் நடத்தி நிலக்கரி தோண்டும் தொழில் துவங்கினால், அது கட்டுப்படியாகக் கூடியது தானா என்பதைக் கண்டறியும் திட்டத்திற்காக 4,98,500 டாலரை அமெரிக்கா, ஒப்பந்தப்படியான ஒரு திட்டத்தின் கீழ் தருமாம். இந்த கூட்டுத் திட்டத்திற்கு இந்தியா தனது பங்காக ரூ. 4 லட்சம் தரும் என்றும் கூறப்படுகிறது.

நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகள் 36-லும், ஆராய்ச்சிக் கூடங்கள் 15-லும் விரிவான இடவசதிகள், அபிவிருத்திகள் செய்வதற்கான திட்டம் ஒன்றும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ளது.

கால்நடைகளுக்குக் கொடுமை

பரிசீலனை செய்ய குழு நியமனம்

சென்னை, ஜூலை 1—நாட்டில் கால்நடைகளுக்கு கொடுமை இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கு இப்பொழுதுள்ள சட்டத்தின் விதிகள் போதுமானவையா என்பதை பரிசீலனை செய்ய இந்தியப் பேரரசு ஒரு குழு நியமித்துள்ளது என்று தெரிகிறது.

நடைமுறை பற்றியும், தி. மு. கழக மாநில மாநாடு பற்றியும் விளக்கவுரையாற்றினர்.

இனவெறியர் போக்கு!

"மனிதருக்கு மனிதர் இடையே வேறுபாடு கூடாது; மனிதர்களை மனிதர்களாக நடத்த வேண்டும்"

என்ற பகுதியை 'பாண்டு' ஆரம்பப் பள்ளிகளுக்கான கிறித்துவ வேதப் புத்தகமான 'பைபிள்' பாடத் திட்டத்தில் நீக்கிவிட்டனராம்—தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள்!

வெள்ளையரல்லாத சுதேசிகளை அடிமைகளாக அடக்கி ஆள்வதற்கு 'பைபிள்' தலையிலேயே கைவைத்திருக்கும் வெள்ளையரின் இந்தப் போக்கு பலரின் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது.

காடுகள் அழிப்பு

தடுக்க சட்டம் வருகிறது

சென்னை, ஜூன் 2—விருப்பப்படி மரங்களை வெட்டி, பொதுக் காடுகளையும், சொந்தக் காடுகளையும் பொட்டலாக்கி வருவதைத் தடுக்க விரைவிலேயே ஒரு சட்டம் இயற்றுவது சம்மந்தமாக மாநில சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக விவசாய மந்திரி பக்தவத்சலம் தகவல் தந்திருக்கிறார்.

'கவர்னர் காட்டும் அனுதாபம் செயல் வடிவம் பெறுமா?'

'சம்பளத்தை ஏன் தானாகவே குறைத்துக் கொள்ளக்கூடாது?'

சென்னைப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், சத்தியவாணிமுத்து முழக்கம்

1—7—55-ல், சென்னை, ஏழுகிணறு, பாண்டியன் விளையாட்டு மன்றத்தின் ஆண்டு விழா, தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பொதுச்செயலாளர் அவர்கள் பேசியதின் சுருக்கம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. மற்றவர்களின் சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது:—

தோழர் அ. பொன்னம்பலனார் தி. மு. கழகத்தின் வளர்ச்சி குறித்துப் பேசுகையில், கழகக் கருத்துக்கள் 'பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவிவிட்டது என்று குறிப்பிட்டார்.

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டுக்குச் சென்னை மாவட்டத்தின் சார்பில் செலுத்த வேண்டிய பங்குத் தொகையைச் சேர்ப்பதில் தோழர்கள் ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டுமென்றும், திருச்சியில் நடைபெற இருக்கும் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு, நமது எதிர்கால ஆக்கவேலைக்கான திட்டங்களைத் தீட்டித் தருமென்றும், பொதுத் தேர்தல்களில் கலந்து கொள்வது பற்றி முடிவுகள் செய்யுமென்றும் குறிப்பிட்டார்.

★

அடுத்துத் தோழர் என். வி. நடராசன் பேசியதாவது:—

"அண்மையில் சென்னை மாநில கவர்னர் 'சென்னை மாநில சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் ஊதியம் மிகக் குறைவாக இருப்பது பற்றி சங்கடப்படுகிறேன்; ஆனால் அவர்கள் சம்பளத்தை உயர்த்தவோ மாநிலத்தில் நிதி வசதி இல்லை; கவர்னருக்கும், மற்றும் நீதிபதிகளுக்கும் சட்டப்படி ஊதியம் வரையறுக்கப்பட்டுள்ளது; சட்டம் இடங்கொடுக்குமானால் நானாகவே எனது சம்பளத்தைக் குறைத்துக்கொள்வேன்,' என்று பொருள்படும் விதத்தில் கூறியிருக்கிறார். கவர்னர், தாம் விரும்பினால், தம்முடைய ஊதியத்தைத் தாமாகவே குறைத்துக் கொள்ள முடியும்; அதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. தமக்குத் தரப்படும் 10 லட்சம் ரூபாயில் ரூ. 5 லட்சத்தைக் குறைத்துக்கொண்டால், அந்த நல்ல முறையைப் பின்பற்றி மற்ற உயர்தர அதிகாரிகளும் நீதிபதிகளும் கூட தங்கள் ஊதியத்தைக் குறைத்துக்கொள்ள முடியும்; ஆனால், 'சட்டம் இடங்கொடுக்கவில்லை' என்ற ஒரே காரணத்திற்காக அப்படிச் செய்ய முடியவில்லையாம் கவர்னருக்கு!

"கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்குப் போராட்டம்தான் நடத்த வேண்டுமென்பதல்ல தி. மு. கழகத்தின் நோக்கம்; தி. மு. கழகத்தின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டால்-அப்படி புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால் போராட்டம் நிச்சயம் ஏற்படத்தான் செய்யும்; ஆனால் அந்த நிலை ஏற்படுவதற்கு முன்னரே கவர்னர் தாமாகவே முன்வந்து தம் ஊதியத்தைக் குறைத்துக்கொள்வாரேயானால், அது அவருக்கும் பெருமையையே தரும்.

ஐந்தாண்டுத் திட்டத்தையும் தி. மு. கழகம் கண்மூடித்தனமாக எதிர்த்ததே கிடையாது; ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் தென்னாட்டின் மீது காட்டிய ஓரவஞ்சனையை நாம் எடுத்துக் காட்டியபோது நமமீது சிறுவர்கள்—'விபரம் தெரியாதவர்'கள் என்று நம்மைப் பார்த்துக் கூறினார்கள்; ஆனால், இப்போதோ, ஆந்திர முதலமைச்சர் கோபால் ரெட்டியார், 'சென்னை, ஆந்திர மாநிலங்களுக்குத் தரவேண்டிய உரிய பகைத்தருக; நியாயம் வழங்குக' என்று மத்திய சர்க்காரைக் கேட்கிறார்; அத்துடனுமல்ல — 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது உரிய பங்கு கிடைக்கும்படி 'வற்புறுத்துக,' என்கிறார். அவர் கூறும் 'வற்புறுத்துக' என்னும் வார்த்தையில் மறைந்து கிடக்கும் வேதனை வெளித்தோன்றுகிறது. நாம் ஏன் 'வற்புறுத்த' வேண்டும்? வற்புறுத்தத்தான் வேண்டுமென்றால், அப்படிப்பட்ட ஓரவஞ்சனையாளர்களிடமிருந்து நாம் பிரிந்துதானாக வேண்டும்."

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"சென்னை மாநில முதலமைச்சர் காமராசர், ஒரு 'குடுகுடுப்பைக்காரன்' போல், நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றிப் பேசும்போதெல்லாம், 'வந்துவிட்டது—வந்துவிட்டது; இன்று வரும்—நாளை வரும்' என்று 'ஆரூடம்' கூறிக்கொண்டு நாட்களைக் கடத்தி வருகிறார்; ஆனால், இரண்டாண்டுகளுக்கு முன் குடியரசு நாடான எகிப்தில், முதலாளித்துவ ஆட்சி புரிந்துவந்த மன்னன் பரூக் விரட்டப்பட்டு, நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது; அங்கிருந்த நிலமெல்லாம் ஏழை விவசாயிகட்குப் பகிர்ந்து தரப்பட்டிருக்கிறது.

"ஆனால் நம்முடைய மாநிலத்திலோ, ஒரு சாதாரண சிறு தொழிற்சாலை நிறுவ வேண்டுமானாலும் இங்குள்ள மந்திரிகள் டெல்லி சர்க்காருக்குக் 'காவடி' எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய தேவைக்கு — நம்முடைய நல்வாழ்வுக்குத் தேவையானவற்றைச் செய்துகொள்ள அனுமதிக்காத ஒரு சட்டம் தூள் தூளாக்கப்பட வேண்டும். இந்த நாட்டு மக்களை வாழவைக்காத எந்த ஒரு சட்டமும், இந்த நாட்டு மக்களை வாழவிடாத எந்த ஒரு மதமும், ஏழை எளியவர்களின்—பாட்டாளித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுகிறவர்களைக் கொழுக்க வைக்குமானால் அந்தச் சட்டத்தையும், மதத்தையும் நாம் தகர்த்தெறிய வேண்டும்."

இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு, தோழர் என். வி. நடராசன் மேலும் பேசுகையில், வடநாட்டு ஏகாதிபத்தியப் போக்கை விவரித்துக் கூறினார்.

★

தோழியர் சத்தியவாணிமுத்து சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

'வளர்ந்துவரும் நமது தி. மு. கழகத்தைப் பற்றி எதிர்க் கட்சியினர் எதிர்ப்புப் பிரசாரம் செய்வதில் முனைந்துள்ளனர். அப்படி அவர்களின் எதிர்ப்புப் பிரசாரம் தீவிரமாக முனைந்துகொண்டிருக்கிற அதேநேரத்தில், நாமும் அதிக மதிகமாக வளருகிறோம். புராணக் கதைகளிலே, 'ஆண்டவன் தூணிலுமிருப்பார் — துரும்பிலுமிருப்பார்' என்பதுபோல், நமது தி. மு. கழகக் கொள்கைகள் நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

கழகச் செய்திகள்

மேலூரில் (மதுரை) தி.மு.கழகபொதுக்கூட்டம்

23—6—55 மாலை 6½ மணியளவில், முனியாண்டி கோவில் திடலில், தோழர் மு. இராமு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் எஸ். முத்து பேசுகையில், தோழர் கக்கன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானதால் தீண்டாமை ஒழிந்துவிடவில்லையென்றும், காங்கிரசில் ஜனநாயகம் ஏற்பட்டு விடவில்லையென்றும், காமராசர் அரசவையினரால் வெளியிடப்பட்ட தீண்டாமை ஒழிப்பு விளம்பரத் தாள்களை, பார்ப்பனர் தீர்மானத்திற்காகப் பயந்து தொடர்ந்து வெளியிடாததையும், காங்கிரஸ்காரர்கள் நாட்டின் நலத்தில் அக்கரை கொள்ளவில்லையென்றும், அண்மையில் விலகிய மதுரைத் தோழர்கள் மதுரை மாவட்ட போர்டு தேர்தலில் மாற்றுக்கட்சிக்காரர்களுக்காக வோட்டு வேட்டையில் இறங்கி செய்த தில்லு முல்லுகளை விளக்கியும் பேசினார்.

இறுதியாக தோழர் நாஞ்சில் கி.மனோகரன், நேருவின் மாஸ்கோ மாம்பழ அரசியல் பற்றியும், திராவிட நாடு பிரிவினைக்குத் தக்க ஆதாரங்கள் காட்டியும், அண்மையில் திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டிற்கு பொதுமக்கள் அனைவரும் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர்

நாகர்கோவில் நகர தி. மு. கழகம்

18—6—55 மாலை 6½ மணிக்கு, நாஞ்சில் மாவட்ட தி மு கழக அலுவலகத்தில் நடைபெற்ற நாகர்கோவில் நகர தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், 3—6—55ல் நா. மா. தி. மு. க. நிறைவேற்றிய முடிவிற்கிணங்க, கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் குறைந்தது ஒரு ரூபாய் வீதம் வசூலித்து மாவட்டப் பொருளாளரிடம் கொடுப்பதெனவும் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை மாநில மாநாட்டு பொருளாளர் அண்ணா அவர்களை வரவழைத்து அவரிடம் கொடுக்க வேண்டுமென்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக மாநில மாநாட்டு நன்கொடை நிதி வசூல் அமைப்புக் குழுவை வேண்டிக்கொண்டும், விரைவில், நகரில் கழகப் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சேலத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

14—6—55 மாலை 6½ மணிக்கு சேலம் வி மார்க்கெட்டில் அம்மாப்பேட்டை 20-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் ஏ. மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். ஏ. அன்புக்கரசு, அ. சுப்பிரமணியம், ஈ ஆர் கிருஷ்ணன் ஆகியோர் பேசியபின் தோழியர் அருண்மொழி நாட்டின் சமுதாய, பொருளதார, அரசியல் நிலைமையை நன்குவிளக்கி நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

அல்லிநகரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

22—6—55 மாலை 7 மணிக்கு, தோழர் பெ. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சமுத்திரக்கனி, ஆ சங்கரலிங்கம் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் எஸ். முத்து, நாஞ்சில் கி மனோகரன் ஆகியோர் சமூக நிலைகுறித்தும், திராவிட நாடு பிரிவினை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

அரக்கோணத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

18—6—55 மாலை 6 மணிக்கு தோழர் எம். கே. கன்னையா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இளவேயினன், வி. டி. சுவாமி, ஏ. எல். சி. கிருட்டினசாமி ஆகியோர் தற்கால அரசியல் நிலை பற்றிப் பேசிய பின், தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படுவது பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும் தெளிவாகப் பேசினர். கூட்ட இறுதியில், அரக்கோணம் பஞ்சாயத்து போர்டை, பொதுக் கூட்டங்கள் நடைபெற ஒரு பொது இடவசதி செய்துதர கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

முறப்பநாடு தி. மு. கழகம்

16—6—55 மாலை 6 மணிக்கு. தோழர் பி. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், விரைவில் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும், கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்பினர்கள் தேர்தல் சரிவர நடக்காததைக் கண்டித்தும், மேற்படி தேர்தலை மறுபடியும் நடத்தும்படி கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தோழர்கள் அரியமுத்து, நடராசன், சாமிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பி. சுப்பையா, 'கழகமும் கண்ணியமும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

இராசிபுரம் நகர தி. மு. க.

19—6—55 இரவு 8 மணிக்கு, தோழர் ஆர். தேசி தலைமையில், தோழர் பி. சின்னண்ணன் தையற்கடையில் நடைபெற்ற நகர தி. மு கழகச் செயற் குழுக் கூட்டத்தில், மாவட்ட செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களை மாநில மாநாட்டு திறப்பாளராகப் பொதுக் குழுவினர் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தமைக்குப் பாராட்டுதல் தெரிவித்துக்கொண்டும், 2-வது வார்டு தோழர்கள் கிளைக் குழு அமைத்துக்கொள்வதற்கு அனுமதி தந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

பெரியகுளம் தி.மு. கழகம்

26—6—55 மாலை 6 மணிக்கு, பெரியார் திடலில், தோழர் ஏ எஸ். அனிபா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ப. கு. இராமசாமி வெற்றிச் செல்வன், எஸ். முத்து, நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோர் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினர். பொதுக் கூட்டத்தின்போது, மாநில மாநாடு நிதிக்கு பெரியகுளம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 25 தோழர் முத்து அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

உமரிமாநகர் தி. மு. கழகம்

29—6—55 மாலை 7 மணி அளவில், தோழர் மு. சண்முகவேல் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் 28-6-55 மாலை, இவ்வூர் 4-வது வார்டில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஏராளமான வீடுகள் தீக்கிரையானதுடன், சுமார் 3,000 ரூபாய்க்கு மேற்பட்ட நஷ்டமேற்பட்டிருப்பதால், இழந்த தங்கள் வீடுகளைத் திரும்பவும் கட்ட வழியில்லாமல் இருக்கும் ஏழை மக்களுக்கு சர்க்கார் பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டும். மற்றுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சென்னை—திருவொற்றியூர் தி. மு. கழகம்

25—6—55 மாலை தோழர் டி. கே. பழனிசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானுக்கு தோழர் எஸ் ஆர் வெங்கட்ராமன் பாராட்டிதழ் வாசித்தளித்து:கைத்தறித் துண்டு அணிவித்தார். தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் சிறிதுநேரம் பேசிய பின்னர், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், இயக்கக் கோட்பாடுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினர். . பின்னர், திருவொற்றியூரில் உடனடியாக ஓர் பிரசவ விடுதியும் ஒரு உயர்நிலைப் பள்ளியும் கட்டித் தந்து பொதுமக்களுக்கு வசதி செய்து தரும்படி ஊராண்மை மன்றத்தாரையும், நகர மன்றத்தாரையும் கேட்டுக்கொண்டும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகம்

26—6—55 காலை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், பொருளாளர் தோழர் மதிவாணனின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டும், அவருக்குப் பதிலாகத் தோழர் கோ. இறையரசு அவர்களை தேர்ந்தெடுத்தும், கிளைக் கழகச் சார்பில் நூல் நிலையம் ஒன்று துவக்குவதெனவும், நூல் நிலையப் பொறுப்பாளராகத் தோழர் இறைபரசுவைத் தேர்ந்தெடுத்தும், மற்றும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பொறையாறில் தி.மு. கழக பொதுக்கூட்டம்

26—6—55 மாலை 6½ மணிக்கு, பொறையாறு கடைவீதியில், தோழர் கோ. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், வி. ஏ. பாண்டியன், என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பிறகு, தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், தற்கால அரசியல் நிலை குறித்தும், ஐந்தாண்டுத் திட்ட அலங்கோலம் பற்றியும், நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

போடிநாயக்கனூரில் கழகப் பொதுக்கூட்டம்

25—6—55ல் தியாகராயர் திடலில் தோழர் எஸ். முத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கி. மனோகரன் 'நம் நாட்டு மந்திரிகளும் அயல் நாட்டு மந்திரிகளும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்.

பழனி நகர தி. மு. கழகம்

25—6—55ல், பொது உறுப்பினர் கூட்டம் தோழர் அ. தமிழரசு தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் செயற்குழு அமைக்கப் பட்டது. பின்னர், வருகிற ஜூலை திங்கள் இரண்டாவது வாரத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதென்று தீர்மானிக்கப் பட்டது.

புதுவை — கல்மண்டபம் தி. மு. கழகத் திறப்புவிழா

புதுவை வட்டத்தைச் சேர்ந்த கல்மண்டபம் கிராமத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் கிளைக் கழகம் திறக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் இரா. சாம்பசிவம், [illegible] சாமிநாதன் ஆகியோர் இயக்கக் கொள்கை பற்றிப் பேசினர். பின்னர், தோழர் வாணிதாசன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்துச் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு கழகத்தைத் திராவிடர் முன்னேற்றக் கழகத்தைத் திறந்துவைக்கும் முகத்தான் அரியதொரு சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

மாநில மாநாட்டு நிதியளிப்பு விழா

18—6—55 சனி இரவு 9 மணியளவில், கூபரேஜ் திடலில், தோழர் திரு. ஏ. எஸ் அன்பரசு தலைமையில் கொலாபா தி. மு கிளைக் கழகத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழா நடைபெற்றது. தோழர் கே. கே. இராமநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர் ; தலைவர் தமது முன்னுரையில், நிதி அளிப்பு விழா நடத்தும் நோக்கத்தைப் பற்றியும், பம்பாயில் தி. மு. கழகத்தவர் நடத்தவேண்டிய பணி குறித்தும் விளக்கவுரை ஆற்றினர். அடுத்து தோழர் எஸ். கே. ராஜு பம்பாய் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அவர்களைப் பாராட்டி கிளைக் கழகத்தின் சார்பில் கைத்தறி ஆடை அணிவித்தார். பின்னர், தோழர் எஸ் தியாகராசன், சொற்பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்ற தோழர்களுக்கு கழகத்தின் சார்பாகப் பரிசுகள் வழங்கினர். பிறகு, தோழர்கள் தர்மராசன், த மு. பொற்கோ, சு. தங்கவேலன், இரா. சண்முகராசன். க. சு. செகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றியதும் தோழர் எஸ். கே. ராஜு கொலாபா தி. மு. கிளைக் கழகத்தின் சார்பாக மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 25-யும் எஸ். தியாகராசனிடம் வழங்கினர். தோழர் எஸ். தியாகராசன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்து பேசுகையில், அந்தப் பகுதியில் கழகத்தை எம்முறையில் நடத்துவதென்பது குறித்து விளக்கவுரை ஆற்றினர்.

பம்பாய்-மாதுங்கா தி.மு.க.

மாநில மாநாட்டு நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்

26—6—55 மாலை 6 மணிக்கு பம்பாய்—மாதுங்கா கிளைக் கழகச் சார்பில் தோழர் என். பெருமாள் தலைமையில் பம்பாய் தி. மு கழகச் செயலாளர் தோழர் தியாகராசனுக்கு வரவேற்பும், மாநில மாநாட்டு நிதி அளிப்புப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பெ. வரதராசன், தே. சா. நாதன், யோ. தர்மராசன், தேவராசன், வடவைக்குயில், த மு பொற்கோ, பி. எஸ். செல்லையா, ஈ. எஸ். எஸ். பிச்சையா ஆகியோர் தோழர் தியாகராசனைப் பாராட்டிப் பேசியபின், தோழர் தொ. து. அன்புச்செழியன் மாதுங்கா தி. மு. கழகச் சார்பில் ரூ. 50 மாநில மாநாட்டு நிதிப் பங்காகக் கொடுத்தார். தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கும், மாநில மாநாட்டுக்கு வழங்கிய நிதிக்கும் நன்றி தெரிவித்து தோழர் தியாகராசன் பேசினர்.

பம்பாய்—மலாட் தி. மு. க. கிளை அமைப்புக் கூட்டம்

12—6—55 அன்று பம்பாய் மலாட் தி. மு. கழக கிளை அமைப்புக் கூட்டம் மலாட்—பட்டாணி சாலில், பம்பாய் தி. மு. கழக பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆரியசங்காரன் கொடியேற்றுவித்தார். தோழர்கள் க. ஆ. இராமசாமி, த. மு. பொற்கோ, வடவைக்குயில், சண்முகராசன், சா. தர்மராசன், வி. தேவதாசன் ஆகியோர் பேசினர். பின்னர், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொல்லுமாங்குடியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

19—6—55 மாலை 6 மணிக்கு, கொல்லுமாங்குடி நாட்டவாய்க்கால் மணற்பரப்பில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர், கழக நோக்கங்களை விளக்கிப் பேசிய பின், தோழர் சி. பி. சிற்றரசு, சமுதாய முன்னேற்றம் குறித்தும், மற்றும் பல பொருள் குறித்தும்சொற்பொழிவாற்றினர்.

மதிப்புரை

'தமிழ் நாடு டைம்ஸ்'

இப்பெயருடன் சென்னையிலிருந்து திங்களிருமுறையாக நான்கு பக்கங்கள் தமிழ் — நான்கு பக்கங்கள் ஆங்கிலம் என்ற வகையில் ஓரணா விலையில் தமிழ் — ஆங்கில இதழ் ஒன்று வெளிவருகிறது ;

திராவிடர் இயக்கக் கருத்துக்கள் இதழில் நிரம்ப இடம் பெற்றிருப்பது—இயக்கக்கொள்கையை பிரச்சாரம் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது.

நிலைத்து, நீடித்து, இயக்கக் கருத்துக்கள் நாடெங்கும் பரவச் செய்வதற்கு, இந்தப் புது முயற்சிக்கு மக்களிடமிருந்து ஆதரவு கிடைக்குமென முயற்சியாளர்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை

இயக்கத்தினை ஏசித் திரியும் ஒரு சிலரை, கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்க வேண்டியது அவசியமானதுதானா என்பதை அந்த இதழின் நிர்வாகிகள் சிந்திப்பார்களாக !

ஆண்டுச் சந்தா : ரூ. 3. தனி இதழ் : அணா 1.

புதுவையில் வட்டக் குழு

மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 200 அளிக்கப்பட்டது

26—6—55 காலை 10 மணிக்கு, புதுவை தி. மு. கழகத்தில், வட்டக் குழு அமைக்கப்பட்டது. கூட்டத்திற்கு புதுவை வட்ட 12 கிளைகளின் செயலாளர்களும், புதுவைக் கழகத்தின் செயற் குழுவினரும் வந்திருந்தனர்; பார்வையாளராகக் கழகத் தோழர்கள் பலர் வந்திருந்தனர்.

தோழர் ச. சிவப்பிரகாசம் புதுவையில் வட்டக் குழு அமைக்க வேண்டுவதின் அவசியத்தைக்கூறி, தென் ஆற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் இரா சாம்பசிவம் அவர்களை, வட்டக் குழுத் தேர்தலை நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள், வட்டக் குழு இயங்க வேண்டிய முறை பற்றி விளக்கித் தேர்தலை நடத்திவைத்தார்.

தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்களை செயலாளராகக் கொண்ட வட்டக் குழு அமைக்கப்பட்டது.

வட்டக் குழுவின் செயலாளரே மாவட்டப் பிரதிநிதி ஆவதால், ஏற்கனவே புதுவைக் கழகத்தின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மாவட்டப் பிரதிநிதி பொறுப்பினின்றும் தோழர் சிவப்பிரகாசம் விலகிக் கொண்டார். பதிலுக்குத் துணைச் செயலாளர் தோழர் கோவிந்தராசன் அவர்கள் மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் வட்டக் குழுவினரும் செயற்குழுவினருமாகக் கூடி, புதுவையில் நடைபெற இருக்கும் தேர்தல் பற்றி ஆராய்ந்தனர். சிறிது நேர விவாதத்திற்குப் பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் மாநில மாநாட்டு நன்கொடை நிதிக்காகப் புதுவை வட்டத்திற்கு தெ. ஆ. மாவட்டக் குழு விதித்திருந்த ரூ 200-ம், தோழர் இரா. சாம்பசிவம் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

"வரும் ஜூலை மாதம் 18-முதல் 23-ந்தேதி வரை நடைபெற இருக்கும் புதுவை மாவட்ட மக்கள் சபை, நகராண்மைக் கழகத் தேர்தல்களில், புதுவை வட்டத்திலுள்ள தி. மு. கழகங்கள், குறிப்பிட்ட எந்தக் கட்சிக்கும் தம் ஆதரவை அளிப்பதில்லையென்றும், ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள், அவரவர் தொகுதிகளில் நிற்கக் கூடிய அபேட்சகர்களுள், மக்கள் நலனுக்கும், ஏழை—பாட்டாளி மக்களின் உயர்வுக்கும், ஜனநாயகப் பண்புக்கும், உரிமைக்கும், பாடுபடக்கூடிய நல்லெண்ணமுடையவருக்கே தத்தம் வாக்கை அளிப்பது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தன் அதிகாரிகளையே நம்பாத போர்த்துகீசிய ஆதிக்கம்

அடக்குமுறை தளர்கிறது?

புது, ஜூலை 4—

கோவாவிலுள்ள போர்ச்சுகீசிய அதிகாரிகள் தங்கள் சொந்த கோவானிய அதிகாரிகளைக்கூட இப்போது நம்பவில்லை என்று ஆத்மராம் பட்டீல் என்பவர் தகவல் தந்துள்ளார்.

பஞ்சிமிலுள்ள ஒரு சிறையில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருடன் கோவானிய அதிகாரி ஒருவர் பேசிக் கொண்டிருந்ததாகவும், இதைப் பார்த்த போர்ச்சுகீசிய அதிகாரி ஒருவர் ஆத்திரப்பட்டு அவ்விடத்திற்கு உடனே விரைந்து சென்று, அந்த இடத்திலேயே கோவானிய அதிகாரியின் ஆடைகளைக் கழற்றி நிர்வாண கோலத்தில் நிறுத்தி அவமானப்படுத்தினது மட்டுமல்லாமல், அவரை அடித்து நொறுக்கிச் சிறையில் போட்டுள்ளாராம்!

விசாரணை எதுமின்றி அந்தக் கோவானிய அதிகாரி சிறையில் தள்ளப்பட்டுக் கிடக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

போர்ச்சுகீசியரின் நிலை குறித்து மத்திய பிரதேசச் சத்தியாக்கிரகக் குழுத் தலைவரான பிரேம் நாத் எனும் ம. சோ. கட்சி உறுப்பினர் பேசுகையில், நாளுக்கு நாள் கிளர்ச்சிகள் வலுத்து வருவது கண்டு போர்ச்சுகீசிய அதிகாரிகள் இன்னது செய்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருப்பதாகவும், கிளர்ச்சிக்காரர்களை அடைத்து வைக்கப் போதுமான அளவு சிறைகள் இல்லையென்றும், சிறைகளில் இருப்போருக்குக் கொடுக்கப் போதிய உணவு கிடையாதென்றும், எனவே கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்க, அந்த அதிகாரிகள் எந்த வித காட்டுமிராண்டித்தன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்.

★

இந்தியாவில் 7 மாநிலங்களைச் சேர்ந்த மொத்தம் 55 கிளர்ச்சிக்காரர்கள், இன்று கோவா எல்லைக்குள் நுழைந்திருக்கின்றனர். அவர்களில் 34 பேர் கார்வார் எல்லையில் போர்ச்சுகீசியப் போலீசாரால் பின் தள்ளப்பட்டு விரட்டப்பட்டனராம்.

முன்னர் இருந்ததை விட இப்போது போலீசாரிடையே சிறிது 'நிதான' புத்தி இருந்து வருவதாகவும், கோவா தொண்டர்களை முன்போல் கழிகளாலும், துப்பாக்கிகளாலும் கடுமையாகத் தாக்குவதில்லை என்றும், தற்போது சென்றுள்ள கிளர்ச்சிக் குழுவினரைப் போலீசார் கழிகளால் தாக்கியிருந்துங்கூட பலத்த காயங்கள் எதுவும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற மாதம் முழுவதும் கனத்த மழை பெய்ததின் காரணமாக கோவா—கார்வார் நதியில் வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டு, அதனால் ஏற்பட்ட போக்கு வரத்துத் தண்டிப்பின் விளைவாக அப்பகுதியினூடே தொண்டர்கள் செல்லமுடியாத அளவுக்குத் தடை ஏற்பட்டிருக்கிறதாம்.

கோவாவில், 'தீவிரமாகத் தேசிய இயக்கம் பரவியுள்ள இடங்கள்' எனக் கருதப்படும் பாங்கினி, சோவியம், மாச்சம் ஆகிய இடங்களில் பலத்த போலீஸ், இராணுவக் காவல்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது

★

கட்டாய நடவடிக்கை!

பம்பாய்—

கோவா விடுதலைப் போரில் போலீசாரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு ஆளாகி இறந்துபட்ட அமிர்சந்த் குப்தாவின் ஞாபகார்த்தமாக இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய சேனாபதி பாபட், 'கோவாவை விடுவிக்க இந்திய சர்க்கார் போலீஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்கள் சர்க்காரை கட்டாயமாக வற்புறுத்த வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவா அடக்கு முறைக்குக் கண்டனம்

சென்னை, ஜூலை 3—

கோவா விடுதலைக்காக நடைபெறும் போராட்டத்தை ஒடுக்க, போர்த்துகீசியர் கையாண்டுவரும் கொடிய அடக்குமுறையினைக் கண்டிப்பதற்காக, சர்வகட்சி மக்கள் சபை உறுப்பினர் மாநாட்டின் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்றது.

வி. கே. தாகே என்ற மக்கள் சபை உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், போர்த்துகீசிய போலீசாரின் மிருக வெறியைக் கண்டித்தும், இந்தியாவுடன், கோவா இணைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் பலர் பேசினர்.

தோழர்கள் எச். டி. ராஜா, ஏ. கே. கோபாலன், டாக்டர் கே பி. மேனன், பீட்டர் ஆல்வார்ஸ், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, ஜி ராஜமன்னார், ஜெகன்னாதராவ், முகவை-ஆர். எஸ். பாண்டியன், தோழியர் அருண்மொழி முதலானோர் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினர்.

ஒலியைவிட வேகமான 'ஜெட்' விமானங்கள்!

ரஷ்யாவிடம் உள்ளன

மாஸ்கோ, ஜூலை 3—

ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய புது 'ஜெட்' போர் விமானங்கள் ரஷ்யா விடமிருக்கின்றனவாம்.

ரஷ்ய விமானப்படை தினத்தை முன்னிட்டு நடந்த விழாவில், மாஸ்கோவிலிருந்து 10 மைல் தொலைவில் டுஷினோ விமான நிலையத்தின் மீது அந்த ஜெட் விமானங்கள் முன் அறிவிப்பின்றி பறக்கவிடப்பட்டனவாம்.

இதுவரை பொது மக்களுக்குக் காட்டப்படாத ஒரு ராட்சச 'ஹெலிகாப்டர்' விமானமும் அவ்விழாவில் பங்கெடுத்துக்கொண்டதாம்!

இந்திய விமானப்படை தளபதி எஸ் முகர்ஜி, சோவியத் பிரதமர் புல்கானின், குருஷ்சேவ், மாலென்காவ், ஜுகாவ் ஆகியோரும் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

சென்னை மதுவிலக்கு சிப்பந்திகள்

போலீஸ் இலாகாவுடன் சேர்க்கப்படும்?

மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துறையில் உள்ள சுமார் 2,000 சிப்பந்திகளையும் போலீஸ் இலாகாவிலேயே சேர்த்துக்கொள்ளும் வகையில், போலீஸ் இலாகாவை புனரமைக்கும் பிரச்சினை பற்றி சர்க்கார் ஆலோசித்து வருகின்றனராம். செப்டம்பர் மாதத்தில் இப்புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரிகிறது.

1954—55ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளின் மொத்த பெறுமானம், 1953—54ம் ஆண்டிலிருந்ததைவிட ரூ. 54,56,00,000 அதிகமாக இருந்தது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் தேனி வருகை

6—7—55 அன்று மாலை, தேனி தி. மு. கழக (கிளை) சார்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும் நடைபெறும். அவ்வமயம், மாநில மாநாட்டுக்கு நிதியளிக்கப்படும்.

★★★★★★★★★ ★★★★★★★★

சென்னை 3-வது வட்ட தி.மு. கழக பொது உறுப்பினர்கட்கு

★

6—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை 3-வது வட்ட தி மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், எண் 19-ஏ, வேலாயுத பாண்டியன் தெருவில் (மாடியில்) நடைபெறும். அதுபோது, கிளைக் கழகத்துக்கான முக்கிய நிர்வாக விஷயங்கள் பற்றி ஆராயப்படும்.

பழனி இளைஞர் தி. மு. கழக உறுப்பினர்கட்கு

★

6—7—55 இரவு 9½ மணிக்கு பழனி இளைஞர் தி மு கழக உறுப்பினர்கள் கூட்டம், பழனி சிவநேசம் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, அண்ணா அவர்கள் மதுரை மாவட்டச் சுற்றுப்பிரயாணத்தின்போது பழனிக்கு அழைத்து ஆண்டு விழாவை நடத்துவது, மாநில மாநாட்டுக்கு நிதி தருவது, புத்தாண்டுக்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது மற்ற இதர விஷயங்கள் பற்றி யோசிக்கப்படும்.

'கலப்புமணம்செய்ய வேண்டுமென சட்டம் வேண்டும்'

சாதி முறை ஒழிய ஜெகஜீவன்ராம் கூறும் வழி

குவாலியர், ஜூலை 1—

"நாட்டில் உள்ள பல்வேறு சாதி முறைகள் ஒழிய வேண்டுமானால் அதற்குக் கலப்பு மணமே சிறந்த வழியாகும்," என்று, மத்திய அரசாங்க மந்திரி ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டிருக்கிறார்.

சமீப காலத்தில் இந்தியாவில், சாதி முறை சிறிது வலுவிழந்திருப்பதற்கு நடைபெற்றுள்ள கலப்பு மணமே காரணம் என்று தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"மக்கள் தங்களின் சுதந்திரத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால், சாதீய முறைகளை அடியோடு விட்டொழிக்க வேண்டும்," என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

"கலப்புத் திருமணம்தான் செய்துகொள்ள வேண்டும் என்று சட்டம் செய்ய வேண்டும்; இப்போது சில பல மட்டும்தானே கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன? சட்டப்படி எல்லோரும் கலப்புத் திருமணமே செய்து கொள்ளவேண்டும் என்று சட்டம் இருந்தால் தான், சாதீய முறைகள் சீக்கிரமாக ஒழியும்"

என்று ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டிருக்கிறார்.

'அப்பீல் டிரிபியூனல்களை ஒழிக்கவும்!'

தேசீய தொழிற் சங்கக் கோரிக்கை

பம்பாய், ஜூலை 3—

'தொழில் அப்பீல் டிரிபியூனலை' ஒழிக்க வேண்டும் என்று பம்பாய் இந்திய தேசியத் தொழிற் சங்க நிர்வாகிகள் கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அப்பீல் டிரிபியூனல்கள் அண்மையில் அளித்துள்ள தீர்ப்புகளைக் கவனித்தால் அவை மிகக் கவலை ஊட்டுவதாயும், தொழிலாளருக்கு அவநம்பிக்கையையும் அதிருப்தியையும் ஊட்டுவனவாக இருக்கின்றன என்றும், தன்னுடைய கடமைகளை அது நிறைவேற்றத் தவறி விட்டதின் காரணமாக தொழிலாளருக்கு அதன்மீது நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டுள்ளதென்றும், அது இதுவரையிலும் தவறான கொள்கைகளைத்தான் வகுத்து வந்திருக்கிறதே தவிர 'நியாயம்' வழங்கினதே கிடையாது என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

'உருப்படியான திட்டங்கள் இல்லை'

மந்திரி தரும் 'சர்டிபிகேட்'

"'அதிகப்படியானவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகச் சிறு கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் பெருக்க வேண்டும்' என்று கூறப்படுகிறது. ஆனால் அவ்வளவும் வெறும் கூற்றளவோடு மட்டும்தானே தவிர, அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள 'உருப்படியான திட்டங்களோ மிகக் குறைச்சல்."

—இவ்வாறு மத்திய சர்க்கார் தொழில்துறை அமைச்சர் டி டி. கிருஷ்ணமாச்சாரியார் சென்னையில் உள்ள சர்க்கார் மாளிகையில் கைத்தொழில் பொருட்கள் விற்பனை நிலையம், கண்காட்சி நிலையம் ஆகியவற்றிற்கு அடிப்படைக் கல்நாட்டு விழாவில் பேசுகையில் கூறினார்

"நாட்டின் செல்வ நிலை உயரச் செய்ய சிறு கைத்தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் உள்ள முக்கியத்துவம் அதிகமாகும். இதனால்தான் இந்தவகை நிலையம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் மேலும் பேசினார்

"இயந்திரப் பொருட்களைத் தடை செய்வதால் மட்டும் கையால் செய்யப்பட்ட பொருட்களுக்கு மார்க்கெட் பிடித்துவிட முடியாது. இவ்வாறு தடை செய்தால், அதனால் பொருட்களின் விலை உயருவதுடன் மக்கள் உபயோகத்திற்கான மற்ற பொருட்களின் பற்றுக் குறையும் அதிகமாகும். சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்ய எந்தவித 'குறுக்கு வழியும்' கிடையாது."

இவ்வாறு பேசியவர், 'எடுத்த உடனேயே பலன் கிடைத்துவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் கூடாது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கட்டப்பட இருக்கும் இந்த நிலையம் முழுவதுமாகக் கட்டி முடிக்க ரூ. ஒன்றரை இலட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

'காருக்குள் முத்தமிடுவது ஆபாசமானதல்ல'

வழக்கொன்றில் தீர்ப்பு

"இரவுக் காலத்தில், ஏகாந்தமான ஒரு திறந்த வெளியில், ஒரு காரை நிறுத்திவைத்து, அதனுள் உட்கார்ந்துகொண்டு ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொள்ளலாம்; அது குற்றமாகாது"-என்று இத்தாலியைச் சேர்ந்த டூரினில் வழக்கொன்றில் தீர்ப்பளித்துப் பேசிய நீதிபதி கூறியிருக்கிறார்!

ஒரு காரினுள் உட்கார்ந்து கொண்டு இளந் தம்பதிகள் ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்ததற்காக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது

அதை 'ஆபாசமான செய்கை' என்று கருத முடியாது என்று மேற்படி நீதிபதி கூறி, கைதிகளான தம்பதிகளை விடுவித்தாராம்!

சமுதாய நலத் திட்ட வட்டாரங்களிலும், தேசிய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரங்களிலும் நியமிக்கப்பட்டிருந்த சிப்பந்திகளின் மொத்த எண்ணிக்கை 1955 மார்ச் 31-ந் தேதியன்று 14,392 ஆக இருந்தது.

திருமணம்

6—7—55 காலை 9 மணிக்கு. வேலூர் தோட்டப்பாளையம் அருகந்தம்பூண்டி, சலவன்பாளையம் வீதி 68-ம் எண்ணுள்ள இல்லத்தில். தோழர் பெ. தண்டபாணி—தோழியர் சங்கரிபாய் திருமணம், திரு. டாக்டர் வி முருகேசன் தலைமையில் நடைபெறும். தோழர் வி. முனுசாமி எம் பி., சொற்பொழிவாற்றுவார்.

கவர்னர் காட்டும்......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டின் பல மக்களிடத்திலும், நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பரவிக் கொண்டே வருகின்றன.

"பொதுவாக, ஒரு கட்சி என்றால் அது ஒரு குறிப்பிட்ட துறையில்தான் இயங்கிவரும் அரசியல் துறையை எடுத்துக் கொண்டால் நாட்டுப் பிரிவினை போன்றவைகளுக்காகவும், சமுதாயத் துறையில ஈடுபட்டால் சமுதாயத்திலுள்ள கேடுபாடுகளை நீக்கவும், பொருளாதாரத்துறையினை மேற்கொண்டால் ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமையை போக்கவுமே தான் ஒரு கட்சி இயங்கும்; ஆனால் தி. மு. கழகமோ, ஒரே கழகமாக இருந்துகொண்டு, அரசியல்—சமுதாயம்—பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டு நாட்டுச்குப் பணி புரிகிறது.

"இப்போது நாடு முழுமையிலும் நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிகள் வலுப்பெற்றுக்கொண்டு வருகின்றன. பஞ்சாபில் சீகியர்களின் கிளர்ச்சி—'பஞ்சாப் மொழி வழி மாநிலம் வேண்டும்' என்பதற்காக; நாகர்களின் தனி நாடு கோரிக்கைக்காகக். கிளர்ச்சி;—கோவாவில் போர்ச்சுகீசியர்களின் ஏகாதிபத்தியப் பிடியினின்றும் விடுவித்துக்கொள்ள சுதந்திரக் கிளர்ச்சி; இங்கே, நாம் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கேட்கிறோம்; ஆனால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு—ஒதுக்கித் தள்ளிவிட்டு பிரதமர் நேருவோ ரஷ்யாவில் சென்று 'சமாதானம்' பற்றிப் பேசுகிறார்.

"தனது சொந்த நாட்டில் உள்ள குழப்பங்களைத் தீர்த்துக் கட்டி சமாதானம் காணத் தெரியாதவர், ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கப்பால் சென்று 'சமாதானம்' பற்றிப் பேசுகிறார்.

"காந்தியார் தம் இறுதிக் காலத்தில், தமக்குப் பின் வரவேண்டியவர் நேரு என்று கண்டு, தம்முடைய 'சமாதானம்' 'அகிம்சை' என்ற என்ற இரண்டு ஆயுதங்களையும் நல்லெண்ணத்தோடு தான் நேருவிடம் கொடுத்துச் சென்றார்; ஆனால் அந்த ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட நேருவோ, தமது சொந்த நாட்டில் அவற்றை உபயோகிக்காமல் பிறநாடுகளில் முறை தவறிப் பயன்படுத்துகிறார்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.